TNED140020942025

Presented on : 10-11-2025
Registered on : 12-11-2025
Decided on : 23-03-2026
Duration : 0 years, 4 months, 13 days

**நீதித்துறை நவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 09ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.441/2025**

மாநில அரசுக்காக
காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
அம்மாபேட்டை காவல் நிலையம்,
அம்மாபேட்டை.
(குற்ற எண். 262/2025). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

முருகேசன் (45/2025)
த/பெ.சண்முகம் ... எதிரி

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | அரசுக்காக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், அம்மாபேட்டை காவல் நிலையம், அம்மாபேட்டை. (குற்ற எண். 262/2025). |
| 2. | எதிரியின் பெயர் | முருகேசன் (45/2025) த/பெ.சண்முகம் |
| 3. | எதிரியின் முகவரி | க.எண்.122B, சிங்கம்பேட்டை கேட், படவால்கால்வாய், ஈரோடு மாவட்டம். |
| 4. | எதிரியின் வயது | 45/2025 |
| 5. | குற்ற நிகழ்வு நாள் | 02.10.2025 |
| 6. | புகார் தேதி | 02.10.2025 |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.23 18:09:04 +0530

<table>
<tr><td>7.</td><td>எதிரி கைது செய்யப்பட்ட தேதி</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td>8.</td><td>எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">Station Bail</td></tr>
<tr><td>9.</td><td>Commitment</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td>10.</td><td>பிரிவு 355 BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td rowspan="4">11.</td><td rowspan="4">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>07.03.2026</td><td>07.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>07.03.2026</td><td>07.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>07.03.2026</td><td>07.03.2026</td></tr>
<tr><td>12.</td><td>விசாரணை முடிக்கப்பட்ட தேதி</td><td colspan="3">12.03.2026</td></tr>
<tr><td>13.</td><td>தண்டனை அல்லது உத்தரவு</td><td colspan="3">23.03.2026</td></tr>
<tr><td>14</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">23.03.2026</td></tr>
<tr><td>15</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="3">அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம்</td></tr>
</table>

இவ்வழக்கு கடந்த 12.11.2025ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. D.பிரகாஷ் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 02.10.2025ம் தேதி இரவு 19.00 மணியளவில், அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முளியனூர், அரசு மதுபான கடை அருகிலுள்ள முட்புதரில் உள்ள மறைவில் எதிரி, 180மிலி அளவுள்ள அரசு மதுபானத்துடன் கூடிய

Veeran Brandy 10 பாட்டில்களை சுயலாபம் பெறும் நோக்கத்தில் அரசு அனுமதியின்றி விற்பனைக்கு வைத்துள்ளார் என்றும், எனவே, எதிரி பிரிவு 4(1)(C) TN Prohibtion Amendment Actன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, அம்மாபேட்டை காவல் நிலைய, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக பிரிவு 230BNSSன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Actன் கீழ் குற்றச்சாட்டினை வனைந்து பிரிவு 263 BNSSன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 சான்றுப்பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

4.1 அ.சா.1 ரகு காவலர் மற்றும் அ.சா.2 கார்த்திக் இரண்டாம் நிலை காவலர் ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கடந்த 02.10.2025ம் தேதி இரவு 19.00 மணியளவில், அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முளியனூர், அரசு மதுபான கடை அருகிலுள்ள முட்புதரில் உள்ள மறைவில் சந்தேகப்படும்படியாக நின்றிருந்த நபரை விசாரித்ததில் அவர் 180மிலி அளவுள்ள மதுபானத்துடன் கூடிய Veeran Brandy 10 பாட்டில்களை வைத்திருந்ததாகவும், அரசு அனுமதியில்லாமல் மேற்படி மதுபாட்டில்களை வைத்திருந்தவரை கைது செய்து, 10 பாட்டில்களையும், கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாக சாட்சியமளித்துள்ளனர்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.23 18:09:10 +0530

4.2 அ.சா.3 தனது சாட்சியத்தில், எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், எதிரியை நிலைய பிணையில் விடுவித்தது குறித்தும், வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது குறித்தும், பின்னிட்டு, புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 4(1) (C)TNP Actன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்து சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரியை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSSன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 4(1)(C) TN Prohibtion Amendment Actன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **<u>தீர்வு</u>**

7.1 இவ்வழக்கின் கோப்புகள் ஆராய்ந்து பார்க்கப்பட்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு குற்றவியல் வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் எதிரி அரசால் தடைசெய்யப்பட்ட மதுபானத்துடன் கூடிய 180மிலி அளவுள்ள மதுபானத்துடன் கூடிய Veeran Brandy 10 பாட்டில்களை அரசு அனுமதியின்றி வாங்கி விற்பனை வைக்கப்பட்டுள்ளதாகவும், எதிரி மீதான குற்றம் தண்டணை நிரூபணம் அளிக்கும்படி வாதிட்டார்.

7.2 எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், தனிநபர் சாட்சிகள் எவரையும் இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றும், வழக்கின் புகார்தாரரே



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.23 18:09:14 +0530

புலன் விசாரணை அதிகாரியாக இருந்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய இயலாது என்று 2018 – 17 – SCC 627, Crl.OP No.19005 of 2022 Gopinath Vs State என்ற மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும உயர்நீதிமன்ற முன்தீர்ப்புரைகளை மேற்கோளிட்டு எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

8. அரசு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கடந்த 02.10.2025ம் தேதி இரவு 19.00 மணியளவில், அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முளியனூர், அரசு மதுபான கடை அருகிலுள்ள முட்புதரில் உள்ள மறைவில் சந்தேகப்படும்படியாக நின்றிருந்த நபரை விசாரித்ததில் அவர் 180மிலி அளவுள்ள மதுபானத்துடன் கூடிய Veeran Brandy 10 பாட்டில்களை வைத்திருந்ததாகவும், அரசு அனுமதியில்லாமல் மேற்படி மதுபாட்டில்களை வைத்திருந்தவரை கைது செய்து, 10 பாட்டில்களையும், கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாக" சாட்சியமளித்துள்ளனர்.

9. ஆனால் எதிரியிடமிருந்து வழக்கு சொத்தை கைப்பற்றியதாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் தனிநபர் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்பதோடு, இவ்வழக்கில் தனிநபர் எவரையும் சாட்சியாக விசாரிக்கப்படவும் இல்லை என்பதும், விசாரிக்கப்படாதற்கான எந்த காரணமும் அரசுத்தரப்பில் தெரிவிக்கவில்லை என்பதும், மேலும் வழக்குச் சொத்தை கைப்பற்றும்போது விடியோ பதிவு எதுவும் செய்யவில்லை என்பதும், சம்பவ இடத்தை குறிக்க பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

10. மேலும், எதிரி அரசு மதுபானத்தை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக தனிநபர் சாட்சிகள் எவரும் சாட்சியமளிக்கவில்லை என்பதோடு, அதை உறுதி செய்யும் வகையில், மேற்படி அ.சா.3 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து ஜனநடமாட்டம் உள்ள பகுதியாக வழக்கு சம்பவ இடம் இருந்தபோதிலும், பொதுமக்கள் எவரையும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்பது அரசுத்தரப்பு வழக்கை



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.23 18:09:17 +0530

இந்நீதிமன்றம் சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட மதுபானமானது தனிநபர் வைத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு குறைவானது தான் என தெரியவருகிறது.

11. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அனைவரும் காவல் துறையை சார்ந்தவர்களாக இருப்பதால், மேற்படி சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் வழக்கு தடய கைப்பற்றுதலின் உண்மை தன்மை குறித்து பெறுத்த முரண்பாட்டையும் ஐயத்தையும் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே, அரசு தரப்பில் வாதிடுவதுபோல் எதிரி மதுபாட்டில்கள் விற்பனைக்காக வைத்திருந்தார் என்றும், மேற்படி தடயத்துடன் கைது செய்யப்பட்டார் என்று மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் உறுதி செய்கிறது.

12. U/s.32 of TNP Act 1937 - **Arrest of offenders and seizure of contraband liquor and articles without warrant:-** Any prohibition Officer, any officer of the Police or Land Revenue Departments, and any other person authorized in that behalf-

(a) may arrest without warrant any person found committing an offence punishable [under section 4, sub-section (1) 4[***], or Section 5 [or Section 7 or Section 24 or any offence punishable with rigorous imprisonment for three years and upwards];

(b) may seize and detain any liquor, drug or other article which he has reason to believe to be to confiscation under this Act; **மற்றும்** SELVI /Vs/ STATE Rep by The Inspector of Police, Rasipuram Police Station, Nammakal District என்ற வழக்கில் 10. A close reading of the above third provison to Section 32 (c) of the Tamil Nadu Prohibition Act would make it abundantly clear that the officer who has seized the illicit arrack can draw samples only in the presence of a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police and then he can destroy the remaining contraband. In respect of the destruction, the said prohibition officer or police officer, in whose presence the destruction is done, should give a certificate in respect of the total quantity seized, the total quantity taken as samples and total quantity destroyed and such certificate should be



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.23 18:09:21 +0530

forwarded to the Magistrate having jurisdiction. But, in this case, drawing of samples as well as the destruction were not made in the presence of either a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police என்று சொல்லப்பட்டுள்ளது.

13. மேற்படி வழிகாட்டுதலும் இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேற்படி பிரிவின்படி இந்த வழக்கில் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32ன்படி கைப்பற்றப்பட்ட பிராந்தி பாட்டில்கள் ஆய்வளார் பதவிக்கு குறையாத பதிவியுடைய அதிகாரி முன்னிலையிலோ அல்லது மதுவிலக்கு அதிகாரி முன்னிலையிலோ கைப்பற்றப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கில் புகார்தாரரே புலன்விசாரணை அதிகாரியாகவும், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்படி மதுவிலக்கு சட்டப்பிரிவு 32ன் கீழ் அ.சா.3 காவல் உதவி ஆய்வாளராக இருந்தாலும் பிரிவு 32ன் கீழான வழிகாட்டுதல்களை கடைபிடிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. புலன்விசாரணை அதிகாரி அல்லாத காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அலுவலர் முன்போ கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்திருக்க வேண்டும். மேலும், தனிப்பட்ட சாட்சிகள் விசாரிக்காகதும் அரசு தரப்பு வழக்கினை நீதிமன்றம் சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது.

14. மேலும் ஒரு தனி நபர் 4.5 லிட்டர் அளவு இந்திய தயாரிப்பு மது பானத்தை தன் வசம் வைத்துக்கொள்ளலாம் என G.O.Ms.No.75 Prohibition and Excise Department, dated 16.04.1996, Rules 1996, Tamil Nadu Liquor (Possession for Personal Consumption) has been framed and as per the table as amended by G.O.Ms.No.14 dated 09.06.2017, a person is entitled to possess 4.5 litres of Indian Made Foreign Spirit and 7.8 litres of beer. என தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. இவ்வழக்கின் எதிரி மேற்படி அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவை விட குறைவாக 1260 ml அளவுடைய மதுபானத்தை வைத்திருந்ததாகத்தான் சுமத்தப்பட்டுள்ளது. அரசு தரப்பில் குற்றம் மேற்படி மதுபானத்தை சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக நிரூபணம் செய்யப்படாத நிலையிலும், அனுமதிக்கப்பட்ட அளவை விட குறைவான



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.23 18:09:24 +0530

அளவே வைத்திருந்ததாக அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அ.சா.பொ.1ன் வாயிலாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரி குற்றவாளி இல்லையென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15. **முடிவாக** எதிரி மீதான குற்றச் செயலை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, **எதிரி பிரிவு 4(1) (C) TNP Actன் கீழ்** குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து, எதிரியை பிரிவு **271(1)BNSSன் கீழ் விடுதலை** செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16. மேல்முறையீட்டு காலத்திற்க்கு பிறகு இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து (P.R.No.350/2025) அ.சா.பொ.1 சுமார் 180 ml அளவுள்ள Veeran Brandy 10 பாட்டில்களில் உள்ள மதுபானத்தை அழித்துவிட்டு காலி மது பாட்டில்களை அரசுக்கு ஆதாயம் சேர்க்க தலைமை எழுத்தருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும், இவ்வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.23 18:09:28 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**

இணைப்பு:

அரசு தரப்பு சாட்சிகள்:

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ரகு, காவலர். |
| அ.சா.2 | திரு.கார்த்திக், இரண்டாம் நிலை காவலர். |
| அ.சா.3 | திரு.ஜெயராமன், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.10.2025 | கைப்பற்றுதல் மகஜர். |
| அ.சா.ஆ.2 | 02.10.2025 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.3 | 02.10.2025 | படிவம் – 91. |

அரசு தரப்பு சான்றுபொருட்கள்: –

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | 180 மில்லி லிட்டர் அளவு கொண்ட Veeran Brandy 10 பாட்டில்கள். |

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:– – இல்லை –

குறிப்பு:

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.23 18:09:31 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**